## 91. பெண்வழிச் சேறல்

**901.** *மனைவிழைவார் மாண்பயன் எய்தார் வினைவிழைவார்*
*வேண்டாப் பொருளும் அது*

**மனைவியை விரும்பி அவளுக்கு அடங்கி நடப்பவர்**
**மறக்க வேண்டியது மாட்சிமைப் பயனை!**
**மாபெரிய காரியங்களையும் கடமையையும்**
**மறக்கும் பொருளும் அதுவே !**

**902.** *பேணாது பெண்விழைவான் ஆக்கம் பெரியதோர்*
*நாணாக நாணுத் தரும்*

**கடமையைப் பெரிதாக எண்ணிப் பேணாமல்**
**கட்டிய மனைவியின் விருப்பத்தை மட்டுமே**
**கடமையே எனப் பெரியதாக எண்ணியவனின்**
**வெள்ளமென இருக்கும் செல்வம்**
**வெட்கக் கேட்டுக்குரியதாகி வேதனையைத் தரும் !**

**903.** *இல்லாள்கண் தாழ்ந்த இயல்பின்மை எஞ்ஞான்றும்*
*நல்லாருள் நாணுத் தரும்*

**இல்லாள் முன் பணிந்து தாழ்ந்து போகும்**
**இயல்பு கொண்ட ஆண்மகன் – மிக்க**
**ஆண்மையுள்ளவர் நடுவே செல்ல**
**ஆனமட்டும் நாணம் ஆக வரும் என்றும் !**

**904.** *மனையாளை யஞ்சும் மறுமையி லாளன்*
*வினையாண்மை வீறெய்த லின்று*

**மனைவிக்கு எப்போதும் அஞ்சும்**
**மறுமைப் பயன் இல்லாதவன் – அரிய**
**செயல் புரியும் ஆண்மை யுடையவனாக இருந்தாலும்**
**செருக்கான “வீறு” எனும் சிறப்பு இருக்காது !**

**905.** *இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்றும்*
*நல்லார்க்கு நல்ல செயல்*

**இல்லாளுக்கு எப்போதும் அஞ்சுபவன்**
**இல்லம் முழுதும் தான் தேடிய செல்வமாக**
**இருந்தாலும் அதன் மூலம் நல்லார்க்கு**
**இணங்கும் நல்ல செயல் செய்ய அஞ்சுவான் !**

906. *இமையாரின் வாழினும் பாடிலரே யில்லாள்*
*அமையார்தோ ளஞ்சு பவர்*

**'இமையார்' என்ற தேவரைப் போல்**
**இன்பமாக வாழ்ந்தாலும்**
**இல்லாளின் தோள் தழுவும்**
**இன்பத்திற்காக அடங்கி அஞ்சுபவனுக்கு**
**இல்லாது போகும் பெருஞ் சிறப்பு !**

907. *பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்*
*பெண்ணே பெருமை உடைத்து*

**பெண் ஏவல் செய்வதைச் சிரமேற்கொண்டு**
**பெரிதும் ஏற்றுக் கொள்ளும் ஆண்மையை விட**
**பெண்மையின் சிறப்பான நாணத்தை கொண்ட**
**பெண்ணின் பெண்மையே பெருமை உடைத்து !**

908. *நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்*
*பெட்டாங் கொழுகு பவர்*

**நண்ணுதலாள் எனப்படும் நல்ல நெற்றியுடைய**
**நல்ல அழகுள்ள பெண்ணிடம் மயங்கி**
**நவிலும் சொல்லை அப்படியே ஏற்று நடப்பவர்**
**நண்பர்களின் குறையையும் தீர்க்க மாட்டார்**
**நன்மைகளைப் பிறருக்கும் செய்ய மாட்டார் !**

909. *அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்*
*பெண்ணேவல் செய்வார்கண் இல்*

**ஆணவம் கொண்ட பெண்கள் இருக்கின்ற**
**ஆணைகளுக்கு அடங்கி இயங்கும்**
**ஆண்கள் அறச்செயல்களையும்**
**ஆகின்ற பொருள் வருவாயையும்**
**ஆன பிற இன்பங்களையும் தேட முடியாது !**

910. *எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்*
*பெண்சேர்ந்தாம் பேதைமை இல்*

**எண்ணி முடிவு காணும் நெஞ்சுறுதி**
**என்றும் உடையவர்க்கு மதி மயங்கி**
**பெண்ணையே சுற்றிச் சுற்றி வந்து சேரும்**
**பெரும் அறியாமை எனும் பேதைமை இருக்காது !**